# Mid-Term-I August-2024
## 9th Std. Social Science Key
## Cuddalore District

**I. சரியான விடையை தேர்வு செய்க**

7 x 1 = 7

1. ஆ) சிம்பன்ஸி
2. ஈ) க்யூனிபார்ம்
3. ஆ) கவசம்
4. இ) டெல்டா
5. இ) சோழர்கள்
6. இ) காகிதம்
7. இ) சீனா

Maria Anthuvan M

**IV. சுருக்கமாக விடையளி (எவையேனும் ஐந்து மட்டும்)** 5 x 2 = 10

**8. பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளைக் கூறு**

டோல்மென் எனப்படும் கற்திட்டை
சிஸ்ட் எனப்படும் கல்லறை
மென்ஹிர் எனப்படும் நினைவுச்சின்ன குத்துக்கல்
தாழி, பாறையைக் குடைந்து உருவாக்கிய குகைகள்
சார்க்கோபேகஸ் எனப்படும் ஈமத்தொட்டிகள்.

**9. எகிப்தியர்கள் கலை கட்டக்கலையில் திறன் பெற்றவர்கள் – விளக்குக**

பரோக்களின் சமாதிகளான பிரமிடுகள் இன்றும் பிரம்மாண்டமான நினைவுச் சின்னங்களாக உள்ளன.
கெய்ரோவிற்கு அருகில் உள்ள கிஸா பிரமிடுகள் உலக அதிசயங்களில் ஒன்றாக கருதப்படுகிறது.
ஸ்பிங்ஸின் சிங்க உடலும் மனிதமுகமும் கொண்ட சிற்பங்களில் ஒன்றாகும்

**10. புவியின் உள் அடுக்குகள் யாவை?**

மேலோடு
கவசம்
கருவம்

**11. ஆழிப்பேரலைகள் என்றால் என்ன?**

ஆழிப்பேரலைகள் எனப்படும் சுனாமி ஜப்பானிய சொல் ஆகும். கடலடியில் தோன்றும் புவி அதிர்ச்சி, எரிமலைச் செயல்பாடு, பெரும் நிலச்சரிவுகள் ஆகியவற்றால் கடலில் பெரிய அலைகள் உருவாகின்றன. இவ்வலைகள் சராசரியாக மணிக்கு 500 கிலோ மீட்டர் வேகத்தில் பயணிக்கும்.

**12. வானிலைச்சிதைவு – வரையறு.**

புவியின் மேற்பரப்பு நேரடியாக வளிமண்டல நிகழ்வுகளோடு தொடர்பு கொள்வதால் பாறைகள் சிதைவடைதலுக்கும், அழிதலுக்கும் உட்படுகின்றன. இதுவே வானிலைச்சிதைவு.

**13. ஆப்ரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறுக.**

"மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி" என ஆப்ரகாம் லிங்கன் கூறியுள்ளார்.

**14. பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள் என்ன?**

NNP – நிகர நாட்டு உற்பத்தி
PCI – தனி நபர் வருமானம்
PPP – வாங்கும் திறன் சமநிலை
HDI – மனிதவள மேம்பாட்டுக் குறியீடு

**15. காலநிலையைப் பாதிக்கும் காரணிகள் யாவை?**

நில நடுக்கோட்டிலிருந்து தூரம்
கடல் மட்டத்திலிருந்து உயரம்
கடலிலிருந்து தூரம்
வீசும் காற்றின் தன்மை
மலைகளின் இடையூறு
மேகமூட்டம்
கடல் நீரோட்டங்கள்
இயற்கைத் தாவரங்கள்.

**விரிவான விடையளி (எவையேனும் ஐந்து மட்டும்)** 5 x 5 = 25

**16. மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது – தெளிவுப்படுத்துக**

புவியின் மேலடுக்குகளில் வரலாற்றுக் கால கட்டங்கள் குறித்த நிலவியல், தொல்லியல், உயிரியல் பதிவுகள் காணப்படுகின்றன. குறிப்பாக மனித மூதாதையரின் எலும்பு புதை படிவங்கள் புதைந்துள்ளன.
மண் மற்றும் பாறை அடுக்குகள், தொல்மானுடவியல் அறிஞர்கள் மற்றும் தொல்லியல் அறிஞர்களால் அகழ்ந்து, சான்றுகள் சேகரிக்கப்படுகின்றன.
அறிவியல் பூர்வமாக கணிக்கப்படும் புதை படிவங்கள் மற்றும் மண்ணடுக்குகளின் காலம்

Scanned with CamScanner

மனிதர்களின் பரிணாமம், தொல் பழங்காலம் பற்றி அறிய உதவுகிறது.
நிலவியல் ஆய்வாளர்களால் புவியின் நீண்ட நெடிய வரலாறு நெடுங்காலம் (Era), காலம் (Period), ஊழி (Epoch), என பிரிக்கப்படுகிறது.
முந்தைய தொல்லுயிரூழி – பல செல் உயிரினங்கள்
பழந்தொல்லுயிரூழி – மீன்கள், ஊர்வன, தாவரங்கள்
இடைத் தொல்லுயிரூழி – டைனோஸர்
பாலூட்டிகள் காலம் – ஆஸ்ட்ரோலாபித்திஸைன்கள் (குரங்கினம்) (இக் குரங்கினத்திலிருந்துதான் நவீன மனித இனம் தோன்றியது)

17. நிரப்புக
அ. இடைக்கற்காலம்
ஆ. ஸ்பிங்க்ஸ்
இ. 1949
ஈ. ஜவஹர்லால் நேரு
உ. கேரளா

18. வளிமண்டலத்தின் அமைப்பை பற்றி ஒரு பத்தியில் எழுதுக
வளிமண்டலம்
புவியைச் சூழ்ந்து காணப்படும் காற்று படலம் வளிமண்டலம் என்று அழைக்கபடுகிறது. புவியை வளிமண்டலம் சூழ்ந்து காணப்படுவதற்கு அதன் ஈர்ப்பு விசையே காரணமாகும்.
வளிமண்டல கூட்டமைப்பு
வாயுக்கள், நீராவி மற்றும் தூசுக்கள் வளிமண்டலத்தில் வேறுபட்ட விகிதத்தில் கலந்து காணப்படுகின்றன.
வளிமண்டல வாயுக்கள்
ஆக்சிஜன் (21%) நைட்ரஜன் (76%) ஆர்கான் (0.93%) கார்பன்-டை-ஆக்ஸைடு (0.03%) நியான், ஹீலியம், ஓசோன், ஹைட்ரஜன், கிரிப்டான், செனான், மீதேன்
வளிமண்டலத்திலுள்ள மற்ற பொருட்கள்
நீராவி, தூசுத் துகள்கள், உப்புத் துகள்கள், மகரந்த துகள்கள், புகை, சாம்பல், எரிமலைச் சாம்பல்
வளிமண்டலத்திலுள்ள அடுக்குகள்
வளிமண்டலத்தில் ஐந்து அடுக்குள் உள்ளன
கீழ் அடுக்கு
மீள் அடுக்கு
இடை அடுக்கு
வெப்ப அடுக்கு
வெளியடுக்கு.

19. வேறு படுத்துக

| | டெல்டா | ஓத பொங்கு முகம் |
|---|---|---|
| 2 | ஆற்றின் முகத்துவாரங்களில் படிவுகள் முக்கோண வடிவில் படிவுகளால் ஏற்படும் நிலத்தோற்றம் டெல்டா ஆகும். | ஆறு கடலில் சேருமிடங்களில் உருவாகிறது. இவ்வகை நிலத் தோற்றங்களில் படிய வைத்தல் செயல் கிடையாது. |
| | உதாரணம் : காவிரி டெல்டா | உதாரணம் : நர்மதா மற்றும் தபதி |

| டெல்டா | ஓத பொங்கு முகம் |
|---|---|
| ஆற்றின் முகத்துவாரங்களில் படிவுகள் முக்கோண வடிவில் படிவுகளால் ஏற்படும் நிலத்தோற்றம் டெல்டா ஆகும். | ஆறு கடலில் சேருமிடங்களில் உருவாகிறது. இவ்வகை நிலத் தோற்றங்களில் படிய வைத்தல் செயல் கிடையாது. |
| உதாரணம் : காவிரி டெல்டா | உதாரணம் : நர்மதா மற்றும் தபதி |

காரணம் கூறுக
பாறைகளை அனைத்து திசைகளிலும் அரிக்கும் தன்மை காற்றுக்கு உண்டு
காற்று எப்போதும் ஒரே திசையில் அடிப்பதில்லை. காற்று அனைத்து திசைகளிலும் கலத்திற்கேற்ப மாறி அடிப்பதால், பாறைகளை அனைத்து திசைகளிலும் அரிக்கும் தன்மை காற்றுக்கு உண்டு..

20. நிலத்தடி நீரின், அரித்தலால் உண்டாகும் நிலத்தோற்றங்களை விவரி
சுண்ணாம்பு நிலப்பிரதேசங்களில் கார்பன்-டை ஆக்ஸைடு கலந்த மலை நீர் விழும் போது அப்பிரதேசங்களிலுள்ள சுண்ணாம்புடன் வேதிவினைபுரிந்து அதனை கரைத்து, சிதைத்து விடுகிறது.
இதன் விளைவாக டெர்ரா ரோஸா, லேப்பீஸ், உறிஞ்சித்துளை, மழைநீரால் கரைந்து உண்டான குடைவு, டோலின், யுவாலா, போல்ஜே

Maria Anthuvan M
ilani high school YouTube Channel
www.Padasalai.Net
Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

குகைகள், அடிநிலக்குகை போன்ற நிலத்தோற்றங்கள் உருவாக்கப்படுகின்றன

டெர்ரா ரோஸா

சுண்ணாம்பு நிலப்பிரதேசங்களில் உள்ள சுண்ணாம்பு மண் கரைந்து சிதைவுற்று பின்னர் அதிலுள்ள எச்சிய செம்மண் இங்கு படியவைக்கப்படுவதால் இந்நிலத்தோற்றம் உருவாக்கப்படுகிறது.

இம்மண் சிகப்பு நிறமாக காணப்படுவதற்கு அதிலுள்ள இரும்பு ஆக்ஸைடு காரணமாகும்.

லேப்பீஸ்

கரடு முரடாக உள்ள சுண்ணாம்புப் பாறைகளிடையே நிலத்தடி நீர் நெளிந்து ஓடும் போது நீண்ட அரிப்புக் குடைவுகள் ஏற்படுகின்றன. இக்குடைவுகளே லேப்பீஸ்கள் என்று அழைக்கப்படுகின்றன.

உறிஞ்சித்துளை

சுண்ணாம்பு பாறைகள் கரைதலினால் ஏற்படும் புனல் வடிவப் பள்ளங்கள் உறிஞ்சு துளைகள் எனப்படுகின்றன.

இதன் சராசரி ஆழம் 3 முதல் 9 மீ வரை காணப்படும்.

குகைகள் மற்றும் அடிநலக் குகைகள்

கரியமில அமிலம் சுண்ணாம்பு பாறைகளில் வினைபுரிவதால் ஏற்படும் வெற்றிடம் குகை எனப்படுகிறது.

அடிநிலக் குகைகளின் தரைப்பகுதி சமமற்றுக் காணப்படும்.

கல்விழுது, கல்முனை, மற்றும் செங்குத்துக் கல்தூண்

குகைகளின் கூரைகளிலிருந்து ஒழுகும் கால்சியம் கார்பனேட் கலந்த நீர் நீராவியாகும்போது கால்சைட் விழுதுகள் போன்று காட்சியளிக்கும். இது கல்விழுது என்று அழைக்கப்படுகிறது.

கால்சியம் கார்பனேட் கலந்த நீர் தரையில் படிந்து மேல்நோக்கி வளர்வது கல்முனை எனப்படும்

கீழ்நோக்கி வளரும் கல்விழுதும், மேல்நோக்கி வளரும் கல்முனையும் ஒன்று சேர்ந்து செங்குத்து கல்தூணாக உருவாகிறது.

**21) இந்தியாவில் மக்களாட்சி பற்றிய உங்களது கருத்து என்ன?**

இந்தியாவின் மக்களாட்சி, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட நாடாளுமன்ற ஆட்சி முறையாகும்.

நாட்டிற்குத் தேவையான கூட்டங்களை உருவாக்குகின்ற இந்திய நாடாளுமன்ற மக்களாட்சி அரசாங்கத்தின் இரு முக்கிய கூறுகள்.

கொள்கை முடிவெடுப்பதில் மக்கள் பங்குபெறுதல், ஒப்பிதல் அளித்தல்.

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா இறையாண்மை, சமதர்மம், மதச்சார்பின்மை, மக்களாட்சி , குடியரசு ஆகிய 5 முக்கிய கொள்கைகளின் அடிப்படையில் இயங்குகிறது.

சாதி, சமய, சினம், பால், கல்வித்தகுதி பாகுபாடு இன்று 18 வயது நிரம்பிய ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் தேர்தலில் வாக்களிக்கும் சமமான வாக்குரிமையைப் பெற்றிருக்கிறார்கள்.

**22) இந்தியாவின் சுற்றுச்சூழல் கொள்கைகளைப் பற்றி விளக்கமாக விவரிக்கவும்**

இந்தியா தன் சுற்றுச்சூழல் கொள்கைக் கடந்த முப்பது ஆண்டுகளாக உருவாக்கி கொண்டு வந்துள்ளது.காற்று, நீர் மாசுபாடு, கழிவு மேலாண்மை மற்றும் பல்லுயிர் பாதுகாப்பு போன்ற சிக்கல்களை எதிர்கொள்ளும் விதமாக சுற்றுசூழல் கொள்கைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்புகள், நீதிமன்ற வழிகாட்டுதல்கள் மற்றும் கூடுதல் அதிகாரங்கள் மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் புதிய மாற்றங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்பின் பிரிவு 51A(g) காடுகள், ஏரிகள், ஆறுகள் மற்றும் காட்டு உயிரிகள் மற்றும் இயற்கைச் சூழலைப் பேணவும் மேம்படுத்துவும் அனைத்து உயிரினங்களையும் பாதுகாக்கவும் இந்தியாவின் உள்ள ஒவ்வொரு குடிமகனும் கடமைப்பட்டுள்ளன என்று வலியுறுத்துகிறது.

மக்களுக்கு அதிக வருமானம், திறன் மிக்க கல்வி, சிறந்த சுகாதாரம், ஊட்டச்சத்து உணவு, வறுமையற்ற நிலை, சம வாய்ப்பு ஆகியவற்றைக் கொண்டு வாழ்வதற்கு ஏற்ற சூழலை ஏற்படுத்துவதே இந்தியாவின் சுற்று சூழல் கொள்கையாகும்.

**பிரிவு -4** 8 மதிப்பெண்

ilahi high school YouTube Channel
www.Padasalai.Net
Maria Anthony M
Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**23) அ. சிந்துவெளி நாகரிகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுது.**

ஹரப்பாதான் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இடம்.
ஹரப்பா நகரங்களில் மதில் சுவர்கள், நன்கு திட்டமிட்ட தெருக்கள், சந்துகள், கழிவுநீர்க் கால்வாய்கள் ஆகியவை காணப்படுகின்றன.
அவர்கள் சுட்ட மற்றும் சுடாத செங்கற்களையும் கற்களையும் கட்டமானங்களுக்குப் பயன்படுத்தினார்கள்.
மொஹஞ்சதாரோவில் உள்ள நன்கு தளமிடப்பட்ட பல அறைகள் கொண்ட மாபெரும் குளியல் குளம் ஒரு முக்கியமான கட்டுமானமாகும்.
தோண்டியெடுக்கப்பட்ட சில கட்டுமானங்கள் களஞ்சியங்கள் போல் காணப்படுகின்றன.
அவர்கள் உலோகத்தாலும் கல்லாலுமான அணிகலங்களைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் மேலும் பருத்தி மற்றும் பட்டாடைகளைப் பயன்படுத்தினார்கள். செம்பு மற்றும் தங்கத்தாலான அணிகலன்களைப் பயன்படுத்தினார்கள்.
அவர்கள் பெண் தெய்வத்தை வழிபட்டார்கள்.
காலிபங்கனில் நெருப்புக் குண்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இறந்தவர்களைப் புதைப்பது வழக்கத்திலிருந்தது.

**23) ஆ. புவி அமைப்பை விவரி.**

புவியின் உள்ளமைப்பு மேலோடு, கவசம், கருவம் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

மேலோடு

நாம் வாழும் புவியின் மேலடுக்கை புவிமேலோடு என்கிறோம். புவியின் தோல் போன்று புவி மேலோடு உள்ளது. இது 5 முதல் 30 கிலோமீட்டர் வரை பரவியுள்ளது.
புவிமேலோடு திடமாகவும் இறுக்கமாகவும் உள்ளது.
புவிமேலோட்டினை கண்ட மேலோடு மற்றும கடலடி மேலோடு என்று இரண்டாகப் பிரிக்கலாம்.
இங்கு சிலிகா (Si), அலுமினியம் (Al) அதிகமாக காணப்படுவதால் இவ்வடுக்கு சியால் (SIAL) என அழைக்கப்படுகிறது.


கவசம்

புவிமேலோட்டிற்கு கீழேயுள்ள பகுதி கவசம் எனப்படும். இதன் தடிமன் சுமார் 2900 கிலோமீட்டர் ஆகும்.
இவ்வடுக்கில் சிலிகா (Si) மக்னீசியம் (Mg) அதிகமாக காணப்படுவதால் இவ்வடுக்கு சிமா என அழைக்கப்படுகிறது.
கவசத்தின் மேற்பகுதியில் பாறைகள் திடமாகவும் கீழ்ப்பகுதியல் உருகிய நிலையிலும் காணப்படுகின்றது. உருகிய நிலையில் உள் பாறைக் குழம்பு "மாக்மா" என அழைக்கப்படுகிறது

கருவம்

புவியின் கவசத்திற்கு கீழ் புவியின் மையத்தில் அமைந்துள்ள அடுக்கு கருவம் எனப்படும். இது மிக வெப்பமானது.
கருவத்தில் நிக்கலும் (Ni) இரும்பும் (Fe) அதிகமாக காணப்படுவதால் இவ்வடுக்கு நை.:.ப் (NIFE) என அழைக்கப்படுகிறது.
கருவம் இரண்டு அடுக்குகளை கொண்டது.
உட்கருவம் திட நிலையிலும் வெளிக்கருவம் திரவ நிலையிலும் உள்ளது

**24. உலக வரைபடம்**




M.Maria Anthuvan
GHS, Kattukudalore
Cuddalore Dt.
9443282980



Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

948

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2024

## ஒன்பதாம் வகுப்பு

**நேரம்: 1.30 மணி** **சமூகஅறிவியல்** **மதிப்பெண்கள்: 50**

பிரிவு - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு:-** **7×1=7**

1) மனிதர்களுடன் மரபணுவியல் நோக்கில் மிகவும் நெருக்கமாக இருப்பது

அ) கொரில்லா ஆ) சிம்பன்ஸி

இ) உராங்உட்டான் ஈ) பெருங்குரங்கு

2) சுமேரியன் எழுத்து முறை ______ ஆகும்

அ) பிக்டோகிராபி ஆ) ஹைரோகிளிபிக் இ) சோனாகிராம் ஈ) க்யூனிபார்ம்

3) பாறைக்குழம்பு காணப்படும் அடுக்கு ______

அ) புவி மேலோடு ஆ) கவசம் இ) கருவம் ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

4) ______ ஆற்றின் மூப்பு நிலையில் உருவாகும் நிலத்தோற்றம் ஆகும்

அ) துள்ளல் ஆ) வண்டல் விசிறி இ) டெல்டா ஈ) மலை இடுக்கு

5) குடவோலை முறையை பின்பற்றியவர்கள் ______

அ) சேரர்கள் ஆ) பாண்டியர்கள் இ) சோழர்கள் ஈ) களப்பிரர்கள்

6) பொருந்தாத ஒன்றை கண்டறி

அ) சூரிய ஆற்றல் ஆ) காற்று ஆற்றல் இ) காகிதம் ஈ) இயற்கை வாயு

7) சார்க் கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளில் இல்லாத ஒன்று ______

அ) இந்தியா ஆ) பாகிஸ்தான் இ) சீனா ஈ) பூடான்

பிரிவு - II

**II. குறுகிய விடையளி:- (5 மட்டும்)** **5×2=10**

8) பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளை கூறுக

9) எகிப்தியர்கள் கலை கட்டடக் கலையில் திறன்பெற்றவர்கள் விளக்குக.

10) புவியின் உள் அடுக்குகள் யாவை?

11) ஆழிப் பேரலைகள் என்றால் என்ன?

12) வானிலைச் சிதைவு - வரையறு?

13) ஆபிரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறுக.

14) பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள் என்ன?

15) காலநிலையைப் பாதிக்கும் காரணிகள் யாவை?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

Scanned with CamScanner

ilam high school YouTube Channel

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



## பிரிவு - III

**III. விரிவான விடையளி. (5 மட்டும்)** **5×5=25**

16) மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது - தெளிவுபடுத்துக.

17) கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) பழங்கற்காலத்திற்கும், புதிய கற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் ________ எனப்படும்.

ஆ) ________ என்பது மனிதத் தலையும், சிங்க உடலும் கொண்ட கல்லால் ஆன மிகப்பெரிய உருவம் ஆகும்.

இ) இந்திய அரசியலமைப்பு இறுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஆண்டு ________

ஈ) சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ________ ஆவார்.

உ) இந்தியாவில் அதிக கல்வியறிவு பெற்றுள்ள மாநிலம் ________

18) வளி மண்டலத்தின் அமைப்பைப் பற்றி ஒரு பத்தியில் எழுதுக.

19) வேறுபடுத்துக.

அ) கருவம் மற்றும் மேலோடு

ஆ) டெல்டா மற்றும் ஓதபொங்குமுகம்

இ) காரணம் கூறு:-

பாறைகளை அனைத்து திசைகளிலும் அரிக்கும் தன்மை காற்றுக்கு உண்டு

20) நிலத்தடி நீரின் அரித்தலால் உண்டாகும் நிலத்தோற்றங்களை விவரி?

21) இந்தியாவில் மக்களாட்சிப் பற்றி உங்களது கருத்து என்ன?

22) இந்தியாவின் சுற்றுச்சூழல் கொள்கைகளைப் பற்றி விளக்கமாக விவரிக்கவும்.

## பிரிவு - IV

**IV. கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி:-** **1×8=8**

23) அ) சிந்துவெளி நாகரீகத்தின் மறைந்த பொக்கிஷங்களைப் பற்றி எழுதுக.

(அல்லது)

ஆ) புவி அமைப்பை விவரி?

24) உலக வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றை குறிக்கவும்.

அ) சீனா ஆ) எகிப்து இ) மெசபடோமியா

ஈ) பசுபிக் நெருப்பு வளையம் உ) புவி அதிர்ச்சி மண்டலம்

ஊ) இமயமலைத்தொடர் எ) சுண்ணாம்பு பிரதேச பகுதி

ஏ) குளிர் பாலைவனம்

********

Ilahi high school YouTube Channel
www.Padasalai.Net
Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com